## ‘டித்வா’ புயலால் பாதிக்கப்பட்டுள்ள

# இலங்கைவாழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## கப்பலில் அனுப்பிடும் நிகழ்வை கொடியசைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச.7-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2025) ‘டித்வா’ புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கைவாழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து 650 மெட்ரிக்டன்னும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன்னும், என மொத்தம் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை இலங்கை நாட்டிற்கு இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில், தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களின் மாதிரி தொகுப்பினை இலங்கை துணைத் தூதர் டாக்டர்.கணேசநாதன் கீதீஸ்வரன் அவர்களிடம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

‘டித்வா’ புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைவாழ் மக்களுக்கு உதவக்கூடிய வகையில், சென்னை துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன் சர்க்கரை, 300 மெட்ரிக் டன் பருப்பு, 25 மெட்ரிக் டன் பால் பவுடர், 25 மெட்ரிக் டன் கொண்ட 5000 வேட்டிகள், 5000 சேலைகள், 10,000 துண்டுகள், 10,000 போர்வைகள் மற்றும் 1000 தார்பாலீன்கள் ஆகிய நிவாரணப் பொருட்களையும் மற்றும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 150 மெட்ரின் டன் சர்க்கரை, 150 மெட்ரிக் டன் பருப்பு உள்ளடக்கிய நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இப்பணிகள் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கைத்தறி துறை மற்றும் வேளாண்மை - உழவர் நலத்துறை ஆகிய துறைகள் மூலம் ஒருங்கிணைந்து சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2025) ‘டித்வா’ புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கைவாழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து 650 மெட்ரிக் டன்னும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 300 மெட்ரிக் டன்னும், என மொத்தம் 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்களை இலங்கை நாட்டிற்கு இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வில், சென்னை துறைமுகத்தில், இலங்கை துணைத் தூதர் டாக்டர். கணேசநாதன் கீதீஸ்வரன், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறைச் செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், சென்னை துறை முகத்தில், இலங்கை துணைத் தூதர் டாக்டர். கணேசநாதன் கீதீஸ்வரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை அதிகாரிரியர் அட்மிரல் சதீஷ்எம். செனாய், பொதுத்துறைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், சென்னை துறைமுகத்தின் தலைவர் விஸ்வநாதன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொதுத்துறை கூடுதல் செயலாளர் பால சுப்ரமணியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், கமோடர் அனில்குமார், கடற்படை ஸ்டேசன் கமாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 505 பயனாளிகளுக்கு அவர்களின் தேவையின் அடிப்படையிலான திட்ட பயன்கள் மற்றும் நலிவு நிலை குறைப்பு நிதிக்கான காசோலையினை வழங்கினார். இந்த விழாவில், அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மருத்துவர் மா.மதிவேந்தன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டம் -

# கலிங்கப்பட்டிக்கு ‘சமூக நல்லிணக்க ஊராட்சி’ விருது !

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - வைகோ நன்றி!

**சென்னை, டிச.7-**

**தென்காசி மாவட்டம் கலிங்கப்பட்டிக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருது வழங்கிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தென்காசி மாவட்டம், சங்கரன் கோவில் வட்டத்தில் உள்ள கலிங்கப்பட்டி எனது சொந்த ஊராட்சி ஆகும்.

இக்கிராமம், சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கு எடுத்துக்காட்டாக உள்ள கிராமம் ஆகும்.

இந்த ஊராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும், வீட்டுக்கு வீடு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சுற்றுப் புறமும் மிகவும் தூய்மையாக வைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றி, தமிழ்நாட்டின் சிறந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

விவசாயம் சார்ந்து கால்நடைகளை வளர்த்து வரும் இப்பகுதி மக்களுக்கு, இக்கிராமத்தில் உள்ள



கால்நடை மருத்துவமனையும் சிறந்த முறையில் சேவையாற்றி வருகிறது.

18 சாதிகளைச் சேர்ந்தவர்கள் கலிங்கப்பட்டி கிராமத்தில் வாழ்கிறார்கள். இம்மக்கள் அனைவருக்கும் ஒரே சமத்துவ பொது மயானம் இன்று வரை இருக்கிறது. இதற்காக தமிழ்நாடு அரசின் சமத்துவ மயான விருதை இரண்டு முறை கலிங்கப்பட்டி கிராமம் பெற்றுள்ளது.

500 ஆண்டுகளில் ஒரு சிறு பிணக்கோ, சாதி, மத மோதலோ வந்தது இல்லை என்ற பெருமைக்குரியது.

கலிங்கப்பட்டி கிராமத்தில் உள்ளவர்கள் எந்த அரசியல் கட்சியில் வேண்டுமானாலும் இருந்து கொள்ளுங்கள். ஆனால் அதனால் நமது ஊரில், அரசியல் சண்டையோ, சாதிச் சண்டையோ வந்துவிடக் கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

இப்படிப்பட்ட சிறப்புகளை உடைய தென்காசி மாவட்டம், கலிங்கப்பட்டி ஊராட்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘சமூக நல்லிணக்க ஊராட்சி விருது 2025’ விருதினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் வழங்கி சிறப்பித்திருக்கிறார்.

முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்

இவ்விருதினை பெரும் அளவிற்கு மிகச் சிறப்பாக பணியாற்றி வரும் கலிங்கப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் மணிமொழி சந்துரு அவர்களுக்கும், ஊராட்சி செயலாளருக்கும், வார்டு உறுப்பினர்களுக்கும், ஒன்றியக் கவுன்சிலருக்கும் வாழ்த்துகளை களையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.


